விண்வரும் மேகங்கள் பாடும் மாவீரரின் நாமங்கள்
கண்வழி கங்கைகள் பாயும் இவர் காவிய நாயகர் ஆகும்

புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து வாருங்கள்
எரிந்த இடத்தில் இருந்து நீங்கள் நிமிர்ந்து வாருங்கள் 2

வேங்கைகளாகி விடிவுகள் தேடி விழுந்த வீரர்களே
தமிழ் வீடுகள் யாவிலும் விழக்குகளாக எரியும் சுவடுகளே
இளமைக் கால இனிமைகள் யாவும் துறந்த வேங்கைகளே
தமிழ் இனத்துக்காக இறந்து தீயில் எரிந்த வீரர்களே

எழுந்து வாருங்கள் நிமிர்ந்து வாருங்கள்
எழுந்து வாருங்கள் நீங்கள் நிமிர்ந்து வாருங்கள்
தமிழ் ஈழம் மலரும் நேரம் இது தான் புரிந்து வாருங்கள்

விண்வரும் மேகங்கள்.......

எதிரிகள் பாளி வீடுகள் ஏறி நடந்த வேங்கைகளே
உயிர் இழந்த போதும் உணர்வுகளோடு மடிந்த வீரர்களே
காற்றும் நிலவும் பூக்கும் மலரும் உங்கள் பெயர் சொல்லும்
இனி காலம் யாவும் மீழும் போதும் உங்கள் பெயர் சொல்லும்

எழுந்து வாருங்கள் நிமிர்ந்து வாருங்கள்
எழுந்து வாருங்கள் நீங்கள் நிமிர்ந்து வாருங்கள்
தமிழ் ஈழம் மலரும் நேரம் இது தான் புரிந்து வாருங்கள்

விண்வரும் மேகங்கள்.......

உங்கள் கனவே எங்கள் நினைவாய் எழுந்து நிற்கின்றோம்
உயிர் ஓடும் குருதி யாவும் சொரியும் நிலத்தில் நிற்கின்றோம்
தலைவன் வழியில் புலிகள் அணியாய் நடந்து செல்கின்றோம்
வரும் தடைகள் யாவும் உடையும் உடையும் நிமிர்ந்து கொள்கின்றோம்

எழுந்து வாருங்கள் நிமிர்ந்து வாருங்கள்
எழுந்து வாருங்கள் நீங்கள் நிமிர்ந்து வாருங்கள்
தமிழ் ஈழம் மலரும் நேரம் இது தான் புரிந்து வாருங்கள்

விண்வரும் மேகங்கள்.............